- புரோட்டான்கள், நியூட்ரான்கள் மற்றும் எலக்ட்ரான்கள் முறையே p,n,e என்ற குறியீடுகளால் குறிக்கப்படுகின்றன.
- ஓர் அணுவானது மின்சுமையற்றது அதாவது நடுநிலைத்தன்மை உடையது. அணுவில் சம எண்ணிக்கையிலான புரோட்டான்களும் எலக்ட்ரான்களும் காணப்படும்.
- ஓர் அணுவில் உள்ள புரோட்டான்களின் எண்ணிக்கை அத்தனிமத்தின் அணு எண்ணாகும்.
- ஓர் அணுவில் உள்ள புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்களின் மொத்த எண்ணிக்கை அத்தனிமத்தின் நிறை எண் எனப்படும்.
- ஒரு தனிமம் மற்ற தனிமங்களுடன் இணையும் திறன் இணைதிறன் எனப்படும்.

## மதிப்பீடு

KC8UUS

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. பருப்பொருளின் அடிப்படை அலகு ___________ ஆகும்.

அ. தனிமம் ஆ. அணு

இ. மூலக்கூறு ஈ. எலக்ட்ரான்

2. அணுக்கருவை சுற்றி வரும் அடிப்படை அணுத் துகள் ___________ ஆகும்.

அ. அணு ஆ. நியூட்ரான்

இ. எலக்ட்ரான் ஈ. புரோட்டான்

3. ___________ நேர்மின் சுமையுடையது.

அ. புரோட்டான் ஆ. எலக்ட்ரான்

இ. மூலக்கூறு ஈ. நியூட்ரான்

3. ஓர் அணுவின் அணு எண் என்பது ___________ ஆகும்.

அ. நியூட்ரான்களின் எண்ணிக்கை

ஆ. புரோட்டான்களின் எண்ணிக்கை

இ. புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்களின் மொத்த எண்ணிக்கை

ஈ. அணுகளின் எண்ணிக்கை

4. நியூக்ளியான்கள் என்பது ___________ கொண்டது

அ. புரோட்டான்கள் மற்றும் எலக்ட்ரான்களைக்

ஆ. நியூட்ரான்கள் மற்றும் எலக்ட்ரான்களைக்

இ. புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்களைக்

ஈ. நியூட்ரான்கள் மற்றும் பாஸிட்ரான்களைக்

### II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஒரு அணுவில் காணப்படும் மிகச்சிறிய துகள்கள் ___________

2. அணுவின் உட்கருவில் ___________ மற்றும் ___________ இருக்கும்.

3. அணுவின் உட்கருவை ___________ சுற்றி வரும்.

4. கார்பனின் இணைதிறன் 4 மற்றும் ஹைட்ரஜனின் இணைதிறன் 1 ஆகும். எனில் மீத்தேனின் மூலக்கூறு வாய்ப்பாடு ___________.

5. மெக்னீசியம் அணுவின் வெளிவட்டப் பாதையானது இரண்டு எலக்ட்ரான்களைக் கொண்டிருக்கிறது எனில் மெக்னீசியம் அணுவின் இணைதிறன் ___________

### III. பொருத்துக.

| | |
|---|---|
| 1. இணைதிறன் | Fe |
| 2. மின்சுமையற்ற துகள் | புரோட்டான் |
| 3. இரும்பு | வெளிவட்டப்பாதையில் காணப்படும் எலக்ட்ரான் |
| 4. ஹைட்ரஜன் | நியூட்ரான் |
| 5. நேர்மின்சுமை கொண்ட துகள் | ஓர் இணைதிறன் |

LIVEWORKSHEETS

## IV. சரியா? தவறா? தவறு எனில் சரியான வாககியம் தருக.

1. ஒரு தனிமத்தின் அடிப்படை அலகு மூலக்கூறு ஆகும்.
2. எலக்ட்ரான்கள் நேர்மின்சுமை கொண்டவை.
3. ஓர் அணு மின்சுமையற்ற நடுநிலைத் தன்மையை கொண்டிருக்கும்
4. அணுவின் உட்கருவைச் சுற்றி புரோட்டான்கள் காணப்படும்.

## V. ஒப்புமை பூர்த்தி செய்க.

1. சூரியன் : உட்கரு ; கோள்கள் : ____________________
2. அணு எண் : ________________ , நிறை எண் : புரோட்டான்கள் மற்றும் நியூட்ரான்களின் எண்ணிக்கை
3. K : பொட்டாசியம் ; C : ____________________

LIVEWORKSHEETS